DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.12/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | LW.2 /PW.2 |
| Name | வேலு |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A4 produced. A1, A3 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22.12.2023 at 11.06a.m

**முதல் விசாரணை:**

நான் T.வேலங்குளத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 குமார் எனது மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக 1 மாதம் பிரச்சனை இருந்து வந்தது. 10.12.2020ந் தேதி இரசு 8.30 மணியளவில் எனது மகன் வீடு அருகே உள்ள தாலிகுளம் அருகே வெளியே சென்றான். அப்போது கருப்பசாமி என்ற குண்டுமணி, பொன்னி என்ற மாசாணம், பூச்சி இருளப்பன், கருப்பசாமி மகன் வினோத்கண்ணன் ஆகியோர் எனது மகனை வழிமறித்து கருப்பசாமி அருவாளை கொண்டு இடது கையில் வெட்டினார். பொன்னி என்னற மாசாணம் மற்றும் அவரது மகன் பூச்சிஇருளப்பன் அருவாளை கொண்டு மகனின் இடதுபக்க தலையில் வெட்டினார்கள். மாயாண்டி மகன் பொன்னி மாசாணம் எனது மகனை கத்தியால் இடது தோள்பட்டையில் வெட்டினார். கருப்பசாமி மகன் வினோத்கண்ணன் அருவாளைக் கொண்டு தலையில் வெட்டினார். அவர்களுடன் தெரியாத நபர்கள் 4 பேர் இருந்தார்கள். எனது மகன் அலறல் சத்தம் கேட்டு வீட்டிலிருந்து எனது மனைவி, மகன், மருமகள் சரண்யா மற்றும் முனீஸ்வரன் ஓடிவந்து பார்த்தோம். எங்களை பார்த்தவுடன் எதிரிகள் ஓடிவிட்டனர். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது மகனை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். அங்கு

முதல் சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் மறுநாள் மதுரை சரவணா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு உள்நோயாளியாக 2 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. சரவணா மருத்துவமனையில் இருந்த போது எனது மகனை எஸ்.ஐ விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். பின்னர் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டு வீட்டிற்கு வந்த பிறகு காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**